## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 142/2019 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | செல்லம்மாள் | நாள் | 06.10.2023 |
| கணவர் பெயர் | சுப்ரமணியம் | | |

**பிரதிவாதி தரப்பில் வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

50) என் வழக்குரை சொத்து விவரத்தில் நான் 15X2 அடி அகல சந்து என நான் குறிப்பிட்டுள்ள நிலையில், என் குறுக்கு விசாரணையில் நான் 25X2 அடி அகல கொண்ட சந்து என தற்போது சொல்கிறேன் என்றால், சரிதான். மேற்படி இரண்டில் எது சரியானது என்றால், 25X2 அடி அகல கொண்ட சந்து தான் சரியானது. அப்போது என் வழக்குரையில் சொல்லியுள்ள 15X2 அகல சந்து என்பது தவறானது என்றால், சரிதான்.

51) மேற்படி சந்தானது என் சொத்து விவரத்தில் பிரதிவாதி மணியரசின் காலி நிலத்திற்கும் தெற்கு மற்றும் மாரியம்மாள் வீட்டிற்கும் வடக்கு என காட்டப்பட்டுள்ளது என்றால், சரிதான். ஆனால், தற்போது நிலையில் மேற்படி பிரதிவாதியின் காம்பவுண்ட் சுவரை ஒட்டியவாறு தெற்குபுறத்தில் அவரது காலி நிலமும், அதற்கு ஒட்டியவாறு தெற்குபுறத்தில் மாரியம்மாளின் காலி இடமும் உள்ளது என்றால், சரியல்ல.

52) மேற்படி பிரதிவாதி மணியரசின் காம்பவுண்ட் சுவற்றை ஒட்டியவாறு தெற்குபுறத்தில் உள்ள காலி நிலத்தில் வீடு கட்டுவதற்காக அஸ்திவாரம் போட்ட குழி எடுக்கப்பட்டது என்றால், சரிதான். மேற்படி நிலம் தான் என்னுடைய நிலம் தான் என சொல்கிறேன் என்றால், ஆம்.

53) அவ்வாறு எனக்கு சொந்தமான நிலத்தில் ஒருவேளை பிரதிவாதி அஸ்திவாரத்திற்காக குழி தோண்டியிருந்தால், அதன் அடியில் உள்ள பைப் லைன்களை அகற்றி தான் குழி தோண்டியிருக்க முடியும் என்றால், இல்லை. அவர்கள் ஓரமாக குழி தோண்டினர்.

54) அவ்வாறு மேற்படி பிரதிவாதி மணியரசின் சுவற்றிற்கு தெற்குபகுதியில்

மேற்கிலிருந்து கிழக்குபுறமாக வரும் சந்தில் மேற்குபுறமாக அமைக்கப்பட்டுள்ள சுவர் தற்போது அகற்றப்பட்டுவிட்டதா என்றால், மாரியம்மாள் எழுப்பிய சுவரை அவர் எடுத்துவிட்டார். ஆனால் பிரதிவாதி எழுப்பப்பட்ட பகுதி சுவர் தற்போதும் நிலையில் உள்ளது.

55) மேற்படி சுவர் அமைக்கப்படுவதற்கு முன்பு அங்கு பிரதிவாதியால் மேற்படி சந்தின் மேற்கு பகுதியில் கதவு வைக்கப்பட்டதா என்றால், இல்லை. சுவர்தான் எழுப்பப்பட்டது. எப்போது அவ்வாறு சுவர் வைத்து அடைக்கப்பட்டது என்றால், இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டதற்கு பின்புதான் அவ்வாறு அடைக்கப்பட்டது. இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டதற்கு பின்பு எப்போது அடைத்தார்கள் என்றால், சுமார் 1 மாதத்திற்குள் அடைத்துவிட்டார்கள். மேற்படி மாரியம்மாள் எப்போது அடைத்தார் என்றால், இவ்வழக்கிற்கு பின்னிட்டு பிரதிவாதி அடைக்கும் போதே அவரும் ஒருபுறம் அடைத்துவிட்டார்.

56) என் வீட்டிற்கு வடக்குபுறம் உள்ள சுவர் யாருடையது என்றால், எங்கள் வீட்டிற்காக நாங்கள் கட்டியது. எந்த வருடம் மேற்படி சுவர் கட்டப்பட்டது என்றால், சுமார் 5 வருடத்திற்கு முன்பு கட்டினோம். மேற்படி காம்பவுண்ட் சுவற்றை ஒட்டி கிழக்குபுறமாக உள்ளது என் வீட்டின் சுவர். என் வீட்டை ஒட்டி வடக்குபுறத்தில் எவ்வளவு காலி நிலம் உள்ளது என்றால், மேற்படி 25X2 அடி அகல சந்து உள்ளது. பிரதிவாதியின் நிலத்தை ஒட்டி கிழக்கிலிருந்து மேற்காக அமைந்துள்ள மதில் சுவரானது என் வீட்டின் வடக்குபுற முடிவில் கிழபுறமாக மீண்டும் வளைந்து செல்கிறது என்றால், சரிதான்.

57) மேற்படி என் வீட்டிற்கு வடபுறமாக கிழமேலாக செல்லும் சுவர் பிரதிவாதியால் கட்டப்பட்டது என்றாலும், மேற்படி சுவரை நான் எழுப்பினேன் என சொல்வது தவறானது என்றாலும், சரியல்ல. மேற்படி காம்பவுண்ட் சுவற்றை ஒட்டி வடக்குபுறத்தில் தான் பிரதிவாதி அவரது வீட்டிலிருந்து வெளியேறும் கழிவு நீரை குழாய் அமைத்து வெளியேற்றி வருகிறார் என்றால், சரியல்ல. மேற்படி சுவர் அமைத்து 30 வருடங்களுக்கு மேல் ஆகிறது என்றால், அதுகுறித்து எனக்கு தெரியவில்லை.

எப்போது தெரிந்து கொண்டேன் என்றால், இவ்வழக்கு தாக்கல் செய்த சமயத்தில்தான் தெரிந்து கொண்டேன்.

58) மேற்படி பிரதிவாதியால் எழுப்பப்பட்ட காம்பவுண்ட் சுவற்றை ஒட்டி தெற்குபுறமாக என் வீட்டின் பின்புறத்தில் என்ன அமைந்துள்ளது என்றால், பின்புறத்தில் குளியலறை அமைந்துள்ளது. மேற்படி குளியலறை கதவின் வழியாகவும், பின்புறத்தில் உள்ள சந்திற்கு வருவதற்கான அமைப்பு உள்ளது. எதனால் மேற்படி வடபுறம் உள்ள மதில் சுவரை அடைத்துள்ளோம் என்றால், மேற்படி வழியை நாங்கள் பெரும்பாலும் பயன்படுத்துவதில்லை என்பதால், அடைத்துள்ளோம்.

59) மேற்படி வடபுறம் உள்ள சுவற்றிற்கு ஒட்டியவாறு எங்களுக்கு சொந்தமான 2 அடி நிலத்தை பிரதிவாதி ஆக்கிரமித்து கட்டியுள்ளார். அவ்வாறு ஆக்கிரமிப்பு செய்ததாக நான் கூறும் நிலையில் அது தொடர்பாக நீதிமன்றத்தில் ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால், அதற்காக தான் இவ்வழக்கையே நான் தாக்கல் செய்துள்ளேன்.

60) இவ்வழக்கை நான் தாக்கல் செய்வதற்கு முன்பு நான் ஆக்கிரமிக்கப்பட்டதாக சொல்லப்படும் பகுதிகளை பார்வையிட்டு அதுகுறித்து தெரிந்து கொண்டு தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், அப்போது முழுவதுமாக ஆக்கிரமிக்கவில்லை. இவ்வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்பு தான் ஆக்கிரமித்துள்ளார். நான் வழக்கு தாக்கல் செய்த போது பிரதிவாதி மேற்படி என் நிலத்திற்கு வடபுறம் சுவர் எழுப்பியுள்ளார் என்பது எனக்கு தெரியும் என்றால், நான் அப்போது பார்க்கவில்லை.

61) மேற்படி சந்திற்கு கிழபுறம் எனக்கு நிலம் உள்ளதாக நான் சொல்லும் நிலையில் எவ்வளவு நிலம் உள்ளது என்றால், சுமார் 2 அடி அகலத்திலும், 5 அடி நீளத்திலும் மேற்படி பாதாள சாக்கடை இணைப்பு உள்ளவரை என்னுடைய நிலம் உள்ளது. மேற்படி பிரதிவாதியால் கட்டப்பட்ட சுவற்றை என் மகன் இடித்தது தொடர்பாக பிரதிவாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால், என் மகன் மீது கொடுக்கவில்லை. என்

மீதுதான் கொடுத்துள்ளார்.

62) நான் சொல்வது பொய்யானது என்றாலும், என் மீதும், என் மகன் மீதும் பிரதிவாதி புகார் அளித்துள்ளார் என்றாலும், நான் என் செல்வாக்கை பயன்படுத்தி மேற்படி பிரச்சனையை பைசல் செய்து கொண்டேன் என்றாலும், சரியல்ல.

63) நான் சொல்வது போல் சந்தோ, சுவரோ எனக்கு கிடையாது என்றாலும், நான் பிரதிவாதியின் நிலத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், சரியல்ல. என் வீட்டிற்கு மேற்குபுறமாக மாரியம்மாள் நிலத்திற்கு நடுவே நான் காம்பவுண்ட் சுவர் கட்டிக்கொண்டேன் என்றாலும், என் வீட்டிற்கு வடக்குபுறம் பிரதிவாதி காம்பவுண்ட் கட்டிக்கொண்டார் என்றாலும், சரியல்ல.

64) என் மகள் தேவகி கடந்த 06.03.2019ம் தேதியில் பிரதிவாதி மீது மேட்டுர் காவல்நிலையத்தில் ஒரு புகார் அளித்துள்ளார் என்றால், சரிதான். மேற்படி புகாரில் என் மகள் தேவகி எங்கள் வீட்டிலிருந்து பிரதிவாதியின் நிலத்தின் வழியாக கழிவு நீர் செல்வதை பிரதிவாதி தடுப்பதாக கூறியுள்ளார் என்றால், சரியல்ல. எங்கள் நிலத்தின் வழியாக கழிவு நீர் செல்வதை தான் பிரதிவாதி தடுக்கிறார்.

65) நான் சொல்வது போல் நாங்களோ, பிரதிவாதியோ எந்த நிலத்தையும் பரிமாற்றம் செய்து கொள்ளவில்லை என்றாலும், மேற்படி சந்து பகுதி பிரதிவாதிக்கு சொந்தமானது என்றாலும், சரியல்ல. நான் பிரதிவாதிக்கு 10X10 சதுரடி நிலத்தை 1970ம் வருடத்திற்கு முன்பே கொடுத்ததாக சொல்வது தவறானது என்றால், சரியல்ல.

66) நான் இவ்வழக்கு சொத்தாக காட்டியுள்ள சந்து பகுதி பிரதிவாதிக்கு சொந்தமானது என்றாலும், அதில் தான் பிரதிவாதி கழிவு நீர் குழாய் அமைக்கப்பட்டுள்ளது என்றாலும், சரியல்ல. பிரதிவாதி மனிதாபிமானத்தின் அடிப்படையில் அவருடைய நிலத்தின் வழியாக குடிநீர் இணைப்பு மற்றும் மின்சார இணைப்புகள் எடுத்து செல்வதற்கு மட்டும் தான் எனக்கு அனுமதி அளித்திருந்தார் என்றால், சரியல்ல. வாதி மனிதாபிமானத்தின்

அடிப்படையில் செயல்பட்டதை தவறாக பயன்படுத்தி பிரதிவாதியின் நிலத்தை அபகரிக்கும் நோக்கத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

67) மேற்படி 2X15 அடி அகல சந்தின் பைப் லைன் செல்வதை காட்டுவதற்கோ, மின் கம்பிகள் செல்வதை காட்டுவதற்காகவோ நான் எவ்வித புகைப்படத்தையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான் . ஆனால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

68) தாவா சந்து தொடர்பாக நான் என் பெயரில் எவ்வித ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். மேற்படி சந்தை பிரதிவாதி நகராட்சியின் அனுமதியில்லாமல் பயன்படுத்தி வந்ததற்காக 1989ம் வருடத்திற்கு முன்பு நகராட்சியால் அபராதம் விதிக்கப்பட்டு, அதை அவர் செலுத்தியுள்ளார் என்றால், சரியல்ல. மேற்படி சந்திற்காக நானும் தான் அபராதம் கட்டியுள்ளேன். அவ்வாறு அபராதம் செலுத்தியதற்காக ஏதேனும் ஆதாரம் செய்துள்ளேனா என்றால், இல்லை.

69) 2014ம் வருடத்தில் என் மகள் தேவகி பெயருக்கு என் வீட்டைப் பொறுத்து நான் தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்துவிட்டதால் மேற்படி என் வீட்டின் பேரில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றாலும், என் மகளின் பெயருக்கு தானசெட்டில்மெண்ட் ஆவணம் அளிக்கப்பட்ட பிறகு என் மகள் மேற்படி வீட்டில் இருந்து கொண்டு பிரதிவாதிக்கு பலவகையில் தொல்லை கொடுத்து வந்தார் என்றால், சரியல்ல.

70) பிரதிவாதி தன் நிலத்திலிருந்த காம்பவுண்ட் சுவற்றை அகற்றிவிட்டு வீடு கட்ட முயற்சி செய்தபோது மேற்படி பைப் லைனையும், மின் இணைப்பையும், எங்கள் நிலத்தில் மாற்றி அமைத்துக்கொள்ள கூறியதால் பிரதிவாதி மீது விரோதம் கொண்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. என் மகள் தூண்டுதலின் பேரில் நான் பிரதிவாதியின் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

71) என் வீட்டிற்கு வடக்குபுறத்திலுள்ள கிழமேல் காம்பவுண்ட் சுவற்றை பிரதிவாதி 25 வருடங்களுக்கு முன்பே கட்டிவிட்டார் என்றால், பெரிய சுவற்றை அப்போதே கட்டிவிட்டார். அப்போது மேற்படி சந்தை பராமரிப்பதற்காக மேற்குபுற எல்லையில் கதவு வைத்து பராமரித்து வருகிறார் என்றால், சரிதான். மேற்படி நிலம் பிரதிவாதிக்கு சொந்தமானது என்பதால் தான் அவர் கதவு வைத்து பராமரித்து வருகிறார் என்றால், சரியல்ல.

72) தற்போது வரை பிரதிவாதியின் கழிவு நீர் குழாய்கள் தான் மேற்படி சந்தின் வழியாக செல்கிறது என்றால், சரியல்ல. இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை அனைத்தும் தவறானது என்றால், சரியல்ல. என் மகளின் தூண்டுதலின் பேரில் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால், சரியல்ல.

ஒம்/−திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.